03.03.2025

OS No: 567/2019

வா.சா.1 திருமதி. நீலாவதி , க/பெ. ஜெகநாதன்

**<u>3,4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ம் வாதியான ஜெகநாதன் எனது கணவர் ஆனதால் அவர் இறந்த காரணத்தால் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தற்போது மதுரை மாவட்டம், மேலூர் தாலுகா, அரசப்பன்பட்டி கிராமத்தில் எனது தகப்பனார் வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தை எனது கணவர் கிரையம் பெற்றது குறித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எவ்வளவு விஸ்தீரண அளவுள்ளசொத்தை எனது கணவர் கிரையம் பெற்றார் என்றால் 79 செண்ட் ஆகும். எனது கணவர் தாவா சொத்தை யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் பெருமாள் என்பவரிடம் கிரையம் பெற்றார். மேற்படி தாவா சொத்து பெருமாளுக்கு எந்தவகையில் பாத்தியமென எனது கணவர் சொன்னாரா என்றால் பெருமாளுக்கு அவருடைய தாயார் கொடுத்த சொத்து என்று எனது கணவர் சொல்லியுள்ளார். தாவா சொத்து பெருமாளுக்கு அவருடைய தாயார் கொடுத்த சொத்து என்பதைக்காட்டிட ஆவணம் ஏதேனும் உள்ளது என எனது கணவர் தெரிவித்தாரா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. மேற்படி பெருமாளுக்கு தாவா வழக்கின் 1ம் பிரதிவாதி மாதவன் உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். தாவா சொத்தை நான் பார்த்ததுண்டா என்றால் தாவா சொத்தை சுத்தம் செய்த போது ஒரு முறை பார்த்துள்ளேன். தாவா சொத்தை நான் பார்க்காமல் பார்த்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் செய்த போது பெருமாளின் தாயார் குஞ்சரம்மாள் வரவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய காலத்தில் குஞ்சரம்மாள் உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் மீது மேற்படி தாவா சொத்திற்கான கிரையம் ஏற்பட்டதற்கு பின்பு 1ம் பிரதிவாதி மாதவன் சிவகங்கை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரின் பேரிலான விசாரணையில் 79செண்ட்டில் பாதி பங்கான 39 1/2

செண்ட் இடத்தை எனது கணவர் திருப்பி கொடுத்துவிடுவதாக சொன்னார் என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது எவ்வித பயன்பாட்டிற்கு உட்படாமல் தரிசாக உள்ளது என்றால் சரிதான். மாதவன் எனது கணவர் மீது புகார் கொடுத்ததால் தாவா சொத்தில் எவ்வித நடவடிக்கையும் எனது கணவர் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகன்கள். தாவா சொத்து சம்மந்தமாக மொத்த சொத்தையும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வேறு நபர்களுக்கு பத்திரங்கள் ஏற்படப்போவதாக தெரிந்து 3ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அறிவிப்பை நாங்கள் பெற்றுக்கொள்ளாமல் நபர் இல்லையென திருப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்பு தாவா சொத்தைப் பொறுத்து கிரையம் எதுவும் நாங்கள் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் எனது முகவரியாக குறிப்பிட்ட இடத்தில் நான் வசித்துவரவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தாவா சொத்திற்கு தனது பெயரில் 196ம் நம்பரில் பட்டா பெற்றதை மாதவன் கேட்க மேற்படி பட்டாவை ரத்து செய்து விடுவதாக எனது கணவர் சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் ரியல் எஸ்டேட் தொழில் பார்த்தவர் என்றால் சரிதான். எனது கணவருக்கு அவரது தொழில் சம்மந்தமாக சிவில் வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கின் நிருபணவாக்குமூலத்திற்கு விபரம் யார் சொன்னது என்றால் நானும், எனது சகோதரர் ராமச்சந்திரனும் சொன்னோம். தாவா சொத்திற்கு அருகே எனது கணவருக்கு வேறு சொத்துக்களும் மற்றும் கிழக்கே எனது கணவர் பெயரில் சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து குஞ்சரம்மாளுக்கு பாத்தியம் என்றும், குஞ்சரம்மாளின் மூத்த மகன் எனது கணவருடன் சேர்ந்து தாவா சொத்தை 1ம் பிரதிவாதியான மாதவனுக்கு தெரியாமல் எனது கணவருக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பெருமாள் அவருடைய சகோதரர் பங்கையும் சேர்த்து எனது கணவருக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல,

பெருமாள் தாவா சொத்தை எனது கணவருக்கு கிரையம் செய்யும்போது அவருடைய சகோதரரான மாதவனுக்கு வேறு சொத்துக்களை அவருடைய தாயார் பிரித்துக் கொடுத்துள்ளதாகவும், தாவா சொத்தானது பெருமாளுக்கு கொடுக்கப்பட்டதாகவும் சொல்லி எனது கணவருக்கு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்தாகும். மேற்படி பெருமாளுக்கும், அவருடைய சகோதரரான 1ம் பிரதிவாதிக்கும் சொத்துக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நானும், எனது கணவரும் 1ம் பிரதிவாதியை மோசம் செய்யவேண்டும் என்பதற்காக கூட்டுச் சதி செய்து வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் 1ம் பிரதிவாதிக்குரிய பங்கான 39 1/2 செண்ட்டைப் பொறுத்து பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 196ம் நம்பர் பட்டா தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்குரிய பங்குசொத்தைப் பொறுத்து கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மாதவன் இறந்ததால் தாவா சொத்தில் 39 1/2 செண்ட் சொத்தானது அவரின் வாரிசுதாரர்களான மற்ற பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்தை ஏமாற்றி பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கைப் பொறுத்து எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

நிருபண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் எனது கணவர் இறக்கும் காலம் வரை குடியிருந்தோம் என்றால் சரிதான்.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.03.03 17:36:02 +0530